## 6.7 சமத்துவபுரங்களில் உள்ள குடியிருப்புகளில் மேல் கூரைகளில் ஓடுகள் பதிப்பதற்கு ஒரு வீட்டிற்கு ரூ2000/– வீதம் நிதி அளித்தல்

ஊரக வளர்ச்சித் (மதி2) துறை

அரசாணை (நிலை) எண் 4 நாள்: 5.1.2000

படிக்க :

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நி.எ.4) துறை. அரசாணை (நிலை )எண்.171 , நாள் 22.10.97
2. அரசுச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் எழுதப்பட்ட நேர்முகக் கடித எண்.31262, நி.எ.2/ 97–30 நாள் 7.12.98
3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–10) துறையின் அரசாணை நிலை எண்,66 நாள் 8.6.1999
4. பொது(பொது–1)த் துறையின் துணைச் செயலர் அவர்களின் நேர்முகக் கடித எண் 56078/ பொது.1/99–68, நாள் 19.12.99
5. ஊரக வளர்ச்சித் துறை செயலரால் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு எழுதப்பட்ட நேர்முகக் கடித எண். 48901/சி2/99 நாள் 24.12.99

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 23.12.99 மற்றும் 24.12.99 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் சமத்துவபுரங்களில் உள்ள வீடுகளில் மழைநீர் ஒழுகாமல் இருக்க, மேல் கூரைகளில் ஓடுகள் பதிப்பதற்கு வீடு ஒன்றிற்கு ரூ.2000/– வீதம் அளிக்க, ரூபாய் ஒரு கோடி அளித்து முடிவு செய்யப்பட்டது.

2. பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில், மாவட்டங்களில் சமத்துவபுரம் அமைத்தல் தொடர்பான விரிவான ஆணைகள் வெளியிடப்பட்டன. இதே போல, ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள் அமைய வேண்டும் என ஆணையிடப்பட்டது. தற்பொழுது, பெரியார் நினைவு சமத்துவபுர வீடு ஒன்றிற்கு அரசு வழங்கும் ஒட்டுமொத்த மானியமாக ரூ.35,000/– வழங்கப்பட்டது. மேலும், பயனாளி ஒருவர் குடியிருப்பு ஒன்றுக்கு சமவெளியாக இருப்பின் ரூ.10,000/–, மலைப்பகுதியாக இருப்பின் வங்கிக் கடனாகப் பெற்று, ஒவ்வொரு வீட்டினையும் ரூ.45,000/ ரூ.47,000/ – ல் கட்டிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. சமத்துவபுரங்களில், பெரும்பான்மையான புகார்கள், மேற்கூரை ஒழுகுதல், சுவர்களில் ஈரம் தேங்குதல் ஆகியவை பற்றியதாக இருந்ததை அரசு கவனமுடன் ஆராய்ந்தது. இதுசம்பந்தமான அறிக்கைகள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டு பல்வேறு நிலைகளில் பரிசீலிக்கப்பட்டு, அழுத்தமான செங்கற்களினாலான ஓடுகளை மேற்கூரையில் பதிப்பதின் மூலம் மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.

4. இத்தகைய பணிகள் குறித்து வரப்பெற்றுள்ள முன்மொழிவுகளில் 264 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டிற்கு மேற்படி ஓடுகளை பதிப்பதற்காக சுமார் ரூ.2750/– செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான வீடுகளில் இப்பணி மேற்கொள்ளும் நிலையில், மேற்படி செலவினம் குறைய வாய்ப்புள்ளதால் வீடு ஒன்றிற்கு ரூ.2000/–அளவில் மொத்தம் உள்ள 5000 வீடுகளுக்கு ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. முன்பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினமான ரூ.1 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) கீழ்க்கண்ட செலவுத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

> “2225 ஆதி திராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 பொது –800 ஏனைய செலவுகள் – ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம் JF “சமத்துவபுரம்” அமைத்தல் 09 உதவி மானியங்கள்” (தகவல் தொகுப்பு குறியீடு 2225 80 800 JF 0906).

6. இது “புது துணைப்பணி” குறித்த செலவாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் பெறப்படும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–1) துறையால் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் (இருப்புகளில்) நிதித் (வரவு செலவு பொது–1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**6. SAMATHUVAPURAM**

7. **1997–98** மற்றும் **1998–99** நிதி ஆண்டுகளில், இதுவரை கட்டப்பட்டுள்ள **58** சமத்துவபுரங்களில் உள்ள **5800** வீடுகளில், மேற்படி ஓடுகள் பதிக்கப்பட வேண்டிய வீடுகளைக் கண்டறிந்து சமத்துவபுரம் வாரியாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு முழு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேற்படி தொகையைப் பெற்று, ஊரக வளர்ச்சி இயக்குநரது பரிந்துரையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த ஆணை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் எண் 94A/LA/IV/2000-1, நாள் **3.1.2000** மற்றும் நிதித் துறையின் எண், **201/ஊ.வ/2000–1** நாள் **4.1.2000** ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலர்